# கலங்காதே மனமே

கலங்காதே மனமே
உன் இயேசு இருக்கிறார்

கண்ணீரின் பாதையில்
நீ நடக்கும் வேளையில்
திடன் கொள் என் மனமே
உன் இயேசு இருக்கிறார்

வாழ்க்கையில் தோல்விகள்
சூழ்கையிலே நீ கலங்குகின்றாயோ
உதவி செய்ய ஒரு ஜீவன் இல்லை
என்று ஏங்குகின்றாயோ
உனக்கு உதவிட
உன் இயேசு இருக்கிறார்

எதிர்காலத்தை நீ நினைக்கையிலே
அது இருளாய் உள்ளதோ
பிரச்சனையை நீ நினைத்துப்பார்க்கையில்
தூக்கம் இல்லையோ
உன் வாழ்வினை மாற்றிட
இயேசு அழைக்கிறார்

குடும்பத்தில் சண்டை கடன் தொல்லை என்று
சமாதானம் இல்லையோ
உன் கவலைகளை சொல்ல  யாரும் இல்லை என்று
கதறுகின்றாயோ
உன் சூழ்நிலை மாறிட
இயேசுவை நோக்கிப்பார்